<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

<u>OS – 3/2022</u>

நாள் 04.12.2024.

PW2 – அப்புச்சாமி

த/பெ – மாரப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of December 2024.)**

<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நானும், பிரதிவாதிகளும் பக்கத்து பக்கத்து ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.3 மூலம் 1982–ல் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் 1980 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையில் சொந்தமாக தறி வைத்து நடத்தி வந்தேன் என்றால் சரிதான். அந்த தறி தொழில் சம்பந்தமான வரவு செலவு கணக்கை நான் பார்த்து வந்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்திற்கு கிழபுறத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றால் நான் 1 1/2 ஏக்கர் மட்டும் தான் என்னுடைய சொத்தாக விற்றேன். மற்ற விபரம் எனக்குத் தெரியாது.

2. நான் அனுபவித்து வந்த சொத்தை தான் விநாயக மூர்த்திக்கு விற்றேன் என்றால் சரிதான். சரியான முத்திரை தீர்வை கட்டணத்தை செலுத்தி தான் கட்டியுள்ளார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றும் நான் இந்த வழக்கிற்காக வேண்டி படித்து பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய தேதி முதல் 1.90 ஏக்கர் சொத்தை தான் அனுபவித்து வந்து அதைத் தான் வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் மூலமாக

விநாயக மூர்த்தி வகையறாவிற்கு கிரையம் கொடுத்தேன் என்று சொன்னால் நான் 1 1/2 ஏக்கர் சொத்தை மட்டும் தான் கிரையம் பெற்றேன் அதை தான் கிரையம் கொடுத்தேன். நான் 1 1/2 ஏக்கர் சொத்தை மட்டும் கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாக சொல்வது பொய். வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் மூலம் சொத்தை கிரையம் பெற்று தாவா சர்வே எண்.33/11–ல் மொத்த விஸ்தீரணத்தையும் நான் அனுபவித்து வந்தேன் என்றும், அவ்வாறு நான் அனுபவித்து வந்த சொத்து முழுவதையும் வா.சா.ஆ.8 மூலம் கிரையம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் மொத்த பரப்பான 1.90 ஏக்கருக்கும் வா.சா.ஆ.8 மூலம் உரிய தொகையை பெற்றுக்கொண்டு தான் கிரையமும், சுவாதீனமும் கொடுத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 1982–ஆம் ஆண்டு முதல் நான் கிரையம் பெற்று சொத்து முழுவதையும் நான் அனுபவித்து வந்தேன் என்றும் அதற்கு பின்னிட்டு வா.சா.ஆ.8 மூலம் 1989– ஆம் ஆண்டு முதல் என்னிடம் இருந்து கிரையம் பெற்ற விநாயக மூர்த்தி வகையறா மொத்த சொத்தையும் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்தில் வாதிகளுக்கோ, வாதியின் தகப்பனாருக்கோ, அவரது தாத்தாவிற்கோ யாதொரு உரிமையும், அனுபவமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையே 2 முதல் 4 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**6,7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்திற்கு வருவாய் துறை ஆவணம் யார் பெயரில் இருந்து வருகிறது என்றால் அது எனக்குத் தெரியாது.

மறுவிசாரணை **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**